Utlendingsdirektoratet
Norwegian Directorate
of Immigration

# தனிநபர் தகவல்களை முகாமில் கையாளும் விதம் பற்றிய தகவல்

அகதி என விண்ணப்பித்துள்ள உங்களை நல்ல ஓர் முறையில் கவனித்துக்கொள்ள வேண்டும்.

உங்களைப்பற்றிய தனிநபர் தகவல்களை கீழ்க்கண்ட தேவைகளுக்காக முகாமும் அத்தோடு UDI யும் கையாளலாம்.

- முகாமில் இடம் வழங்குவதற்கு
- உங்களுக்கு உரித்து உள்ள பணம் கிடைக்கும் வண்ணம் கவனிப்பதற்கு
- பாதுகாவலர் இன்றி தனிமையாக வந்துள்ள 18 வயதுக்கு உட்பட்ட அகதி விண்ணப்பதாரி தகுந்த பராமரிப்பு வழங்குவதற்கு
- நீங்கள் வசிக்கும் முகாமில் உங்களுக்கு பொருத்தமான முறையில் உங்களை பராமரிப்பதற்கு
- உங்களது அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு நீங்கள் மறுபடியும் தாய் நாட்டிற்கு செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் அதை தகுந்த ரீதியில் கவனித்துக் கொள்வதற்கு

நீங்கள் தங்கியிருக்கும் அகதிமுகாம் UDI சார்பாக இதை நிறைவேற்றிக் கொள்வதற்கு உங்களைப்பற்றிய சில தனிநபர் தகவல்களை பதிவு செய்து பயன்படுத்த வேண்டும்.

உங்களைப் பற்றிய தனிநபர் தகவல்களை நாம் கையாளும் பொழுது இவற்றை வெளிநாட்டவர் விடய சட்டம், ஆளுநர் அதிகாரச் சட்டம் மற்றும் தனிநபர் தகவல் சட்டம் போன்ற சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு அமைய நாம் கொண்டுள்ள கடமைகள் மற்றும் செயற்பாடுகள் கையாளப்படும்.

அகதி முகாமிற்கும் UDI இற்கும் தகவல் பாதுகாக்கும் கடமை உண்டு. இதன் பிரகாரம் உங்களைப்பற்றிய பதிவு தகவல்களை பரிமாறும் பொருட்டு இது சட்டத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அல்லது நீங்கள் அதற்கு சம்மதம் வழங்கியிருக்கும் பட்சத்தில் மட்டுமே இவ்வாறு செய்து கொள்ளலாம்.

**முகாமுடன் தொடர்புகொண்டு கீழுள்ள விடயங்கள் பற்றி மேலதிக தகவலை பெற்றுக் கொள்ளலாம்**

- உங்களைப் பற்றி என்ன தகவல்கள் பதியப்பட்டுள்ளது
- இத்தகவல்கள் எங்கிருந்து பெறப்பட்டுள்ளது
- இவை எவ்வாறு உபயோகிக்கப்படுகிறது
- இவை எவ்வகையில் பாதுகாக்கப்படுகிறது

உங்களைப் பற்றி பதிவில் உள்ள தகவல்கள் தவறாக இருந்தால் இதை திருத்திக் கொள்ளும்படி அல்லது நீக்கும்படி நீங்கள் வேண்டிக்கொள்ளலாம். உங்களைப் பற்றி பதியப்பட்டுள்ள தகவல்களை எழுத்து பிரதியாக தரும்படி நீங்கள் முகாமை அல்லது UDI ஐ கேட்டுக்கொள்ளலாம்.

உங்களைப்பற்றிய தனிநபர் தகவல்களை UDI எவ்வாறு பயன்படுத்துகிறது என்பதை வெளிநாட்டவர் அலுவல்கள் அதிகார ஆணையகம் (UDI) இன் தனிநபர் ஆர்வம் காப்பு பிரகடனத்தின் ஊடாக வாசித்து அறிந்து கொள்ளலாம். இதை நீங்கள் udi.no இல் பெறலாம்.

# கையொப்பம் மற்றும் உறுதிப்படுத்தல்

☐ இந்த கடிதத்தில் நான் பெற்ற தகவலை நான் புரிந்து கொண்டேன்.

| இடம் மற்றும் திகதி | நீங்கள் புகலிடம் தேடுபவர் / காப்பாளர் என கையொப்பம் |
|---|---|